தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, நவம்பர் 14, வெள்ளிக் கிழமை

ஐப்பசி 29, அட்சய-திருவள்ளுவர் ஆண்டு, 2017

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்."

சொல்லும்போது கேட்டவரை தன் வயப்படுத்தும் பண்புகளுடன் கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப்படுவது சொல் வன்மை ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைத்தல்

1— (*வினா எண் 9361) திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தனி வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு செயற்குறிப்பு பரிசீலனையில் இருந்து வருகிறது. முடிவு எடுக்கப்படவில்லை.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தச் சட்டமன்றத்தில் தேனியைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு வட்டம் அமைக்கின்ற செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதென்று கடந்த

இரண்டாண்டுகளுக்கு முன்னதாக உறுதியளிக்கப்பட்டது. அது மிக விரைவாகத் துவக்கப்படுகிற காலத்தை உத்தேசமாக அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்வது என்பது உறுதி அளிப்பதாக ஆகாது. பெரியகுளம் மற்றும் உத்தமபாளையம் தாலுக்காக்களைச் சீரமைத்து ஒரு புதிய வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இருந்தது. அப்போது தேனியைத் தலைநகரமாகக் கொண்டு புதியதொரு வட்டம் அமைக்கலாமா என்று ஒரு செயற்குறிப்பு இருந்தது. பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரால் புதியதொரு மாவட்டம் உருவாக்கப் பெற்று, பெரியகுளத்தினுடைய ஒரு பகுதியாக இருக்கிற கொடைக்கானல் பகுதி அண்ணா மாவட்டத்தில் சேர்க்கப்பட்டு விட்டது. ஆகவே, இப்போது பெரியகுளம், உத்தமபாளையத்தினுடைய பகுதியைக் கொண்டு புதிய வட்டம் உருவாக்குவதைப் பற்றி புதிய சிந்தனைகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன.

ஆகவே, தேனியைத் தலைநகராகக் கொண்டு புதியதொரு வட்டம் உருவாக்குவதா என்பது ஒன்று. இப்போது அங்கே பெரியகுளம், உத்தமபாளையம் தாலுக்காக்களைச் சீரமைத்து தேனி தாலுக்கா அமைப்பதற்குப் பதிலாக பெரியகுளம் தாலுக்காவை மட்டும் இரண்டாகப் பிரித்து, கடமலைக்குண்டு பகுதியைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டிப்பட்டி தாலுக்காவை அமைக்க வருவாய் நிருவாக ஆணையர் செயற்குறிப்பு ஒன்றை அனுப்பி இருக்கிறார்கள். ஆண்டிப்பட்டி பகுதி சமூக, பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய பகுதி என்றும், தேனி, பெரியகுளத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருக்கிறது என்றும், ஆகவே, இந்தச் செயற்குறிப்பும் பரிசீலனையிலே வைக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பு இருக்கிறது. விவரங்கள் மேலும் கேட்கப்பட்டு இருக்கின்றன. இந்த இரண்டு செயற்குறிப்புகளும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்கின்ற பரிசீலனை ஒருபுறம் இருக்க, மதுரை நகரத்திலே இருக்கின்ற 'ஆர்ம்ட் ரிசர்வ்' என்று சொல்லக் கூடிய ஆயுதப் படைக் காவலினுடைய தலைமையிடத்தை தேனிக்கு மாற்றுவதற்கு ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்ப

தாக நான் அறிகிறேன். அப்படி மாற்றப்படுமேயானால், திருமங்கலம், மேலூர் பகுதியில் இருக்கின்ற மக்கள் தேனிக்குச் செலவதற்கு சற்றேறக்குறைய 120 கிலோ மீட்டருக்கும் அதிகமாக செல்ல வேண்டியிருக்குமென்ற காரணத்தினாலே, எப்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், அதைப்போலவே, செஷன்ஸ் நீதிமன்றம் மதுரையிலே இருக்கின்றனவோ, அவைகளைப் போலவே இந்த ஆயுதப் படை தலைமையிடத்தை மதுரையிலேயே வைத்திருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வு, மற்றவைகளை எல்லாம் ஆராய்ந்து, என்ன நிலைமை என்பதைப் பற்றி எடுத்துச் சொல்லலாம்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, தமிழகத்திலுள்ள பெரிய வட்டங்களை எல்லாம் இரண்டாகப் பிரிக்கும் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல பெரிய வட்டங்களை இரண்டாகப் பிரித்து புதிய வட்டங்களை உருவாக்கிக் கொண்டு வருகிறோம். ஏற்கனவே துணை வட்டங்களாக இருந்தவைகள் எல்லாம் ஏறத்தாழ அல்ல, எல்லாவற்றையுமே கூட இப்போது வட்டங்களாக மாற்றிவிட்டோம். பல பெரிய வட்டங்களை வேலைப் பளுவின் காரணமாகவும், மக்களுடைய நலன் கருதியும் இரண்டாகப் பிரிக்கின்ற பல செயற்குறிப்புகள் பல மாவட்டங்களில் இருந்து கொண்டு வருகின்றன. ஏழு, எட்டு ஆண்டு காலத்திலே மட்டும், 40, 50-க்கு மேற்பட்ட புதிய வட்டங்கள் தமிழகம் முழுவதும் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அடிப்படையிலேதான் பல பெரிய வட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை வட்டம் மிகப் பெரிய வட்டமாக இருக்கிற காரணத்தால் மயிலாடுதுறை வட்டத்தை இரண்டாகப் பிரித்து, குத்தாலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு குத்தாலம் வட்டம் என்று அமைக்கும் செயல் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 14

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரூரைப் பொதுத் தொகுதியாக மாற்றல்

2—(*வினா எண் 9644) திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தனித் தொகுதியாக உள்ளதை மாற்றி பொதுத் தொகுதி ஆக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் அரூர் தொகுதி நீண்ட நெடுங் காலமாகவே பொதுத் தொகுதியாக இல்லாமல் ஒரு ரிசர்வ் தொகுதியாக இருந்து வருகிறது. இந்தத் தொகுதியைப் பொதுத் தொகுதியாக வரும் 1989 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னால் அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் இரண்டாவது அட்டவணையின் அடிப்படையில் மாநிலத்திற்கு மாநிலம் நாடாளுமன்ற உறுப் பினர்களுடைய தொகுதிகளின் எண்ணிக்கையும், சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளுடைய எண்ணிக்கையும் வகுக்கப் படுகின்றன. மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தியா முழுவதும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தொகுதிகள் வகுக்கப்படுகின்றன. அதற்கு ஏற்ப மாநிலத்திற்கு மாநிலம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளின் கீழே எத்தனை சட்டமன்றத் தொகுதிகள் இருப்பது என்பதைப் பற்றி மாநிலமே முடிவு செய்து, மத்திய அரசும் தேர்தல் கமிஷனும் ஒப்புக் கொள்கிற அளவுக்கு முடிவு செய்யப்படுகின்றன. தமிழகத்தைப் பொறுத்த வரையில் 234 சட்டமன்றத் தொகுதிகள் இருக் கின்றன. அதில் 42 தொகுதிகள் ஆதி திராவிடர் வகுப்பிற்கும்